# தை அமாவாசையின் சிறப்பு

இ.லம்போதரன்
சைவ சித்தாந்த பீடம், கனடா
www.knowingourroots.com

அமாவாசை என்றாலே ஏதோ இறந்த எமது முன்னோர்களுக்குப் பிதிர்தர்ப்பணம் செய்யும் நாள் என்றே பலரும் நினைக்கின்றார்கள். ஆயினும் அமாவாசை என்பது புண்ணிய காலங்களில் ஒன்றாகும்.

வானியல் விஞ்ஞான ரீதியில் அமாவாசை அன்று சூரியன், பூமி, சந்திரன் மூன்றும் ஒரே நேர்கோட்டில் நிற்க, நமது பூமியை நோக்கிய சந்திரனின் பகுதிக்கு சூரிய ஒளி படாது. இதனால் பூமியில் உள்ள எமக்கு அன்று சந்திரன் கண்ணுக்குப் புலனாவதில்லை.

சந்திரகிரகணத்தின் போது இவ்வாறே சூரியன், பூமி, சந்திரன் மூன்றும் ஒரே நேர்கோட்டில் நிற்க, பூமியின் நிழலுக்குள் சந்திரன் வருவதால் அதில் சூரிய ஒளி படாமல் போக அது பிரகாசிப்பதில்லை.

இதனால் ஒவ்வொரு அமாவாசையையும் மாதம் தோறும் நிகழும் ஒரு மினி சந்திரகிரகணம் எனலாம்.

இவ்வாறான சில நாட்களை புண்ணிய காலங்கள் என எமது சமயம் கூறுகின்றது.

## புண்ணிய காலம் என்றால் என்ன?

சில காலங்கள் அல்லது நாட்கள் எமது தனிப்பட்ட பூசை, மந்திர செபம், உச்சாடனம், தியானம் போன்றவற்றுக்கு சிறப்பானவையாகும். இந் நாட்களில் இவற்றைச் செய்யும்போது துரிதகதியில் அதிகபலன் கிட்டுகின்றது; மந்திர சித்தியும் இலகுவில் சாத்தியமாகின்றது. இது இந்நாட்களில் எமது மனம் குவிந்து ஏகாக்கிரக சித்தம் உடையதாக வருவது எளிதாக இருப்பதானாலாயும் இருக்கலாம்.

இவ்வாறாக தனிப்பட்ட மந்திர செபம், உச்சாடனம், தியானம், பூசை போன்றவற்றுக்கு உகந்த புண்ணிய தினங்களில் ஒன்று அமாவாசை. அமாவாசையில் பிதிர் தர்ப்பணம் செய்பவர்கள் பகலில், மத்தியான காலத்தில் பிதிர் வழிபாடும் தர்ப்பணமும் செய்தல் வேண்டும். அமாவாசையில் மாலையும் இரவு வேளையும் இவ்வாறான மந்திர செபம், தியானம், உச்சாடனம், பூசை ஆகியவற்றுக்கு மிகவும் உகந்தது.

## புண்ணிய நாட்கள் அல்லது காலங்கள் எவை?

அமாவாசை மட்டுமல்லாது பௌர்ணமி, அட்டமி, சதுர்த்தசி, சூரிய கிரகணம், சந்திர கிரகணம், பன்னிரண்டு மாசப் பிறப்பு நாட்கள் ஆகியவை இவ்வாறு புண்ணிய நாட்களாக விதிக்கப்படிருக்கின்றன.

## தை அமாவாசையின் சிறப்பு

இந்த புண்ணிய காலங்கள் யாவற்றிலும் சிறந்தது தை அமாவாசை ஆகும்.

தை அமாவாசையிலும் ஞாயிற்றுக் கிழமையில், திருவோண நட்சத்திரத்தில், விதிபாத யோகம் கூடிய நாளில் வருகின்ற அமாவாசை மிகவும் சிறப்பானது. இதை **அர்த்தோதயம்** (அர்த்த உதயம் = பாதி உதயம்)என்பர்.

இதே போல் திங்கட்கிழமையில் திருவோண நட்சத்திரமும், விதிபாத யோகமும் கூடிய நாளில் வருகின்ற அமாவாசை உத்தமத்திலும் உத்தமமான புண்ணிய காலம் ஆகும். இதை **மகோதயம்** (மகா உதயம் = பூரண உதயம்) என்பர். இந்த நாள் ஒன்றிலே தான் 18ம் நூற்றாண்டில் திருக்கடவூரில் அபிராமி பட்டர் பூரண சந்திர உதய அனுபவம் பெற்றார்.

## சைவவினாவிடையில் புண்ணியகாலம்

### ஸ்ரீ பஞ்சாட்சர செபம் எவ்வெக் காலங்களிலே விசேஷமாகச் செய்யத் தக்கது?

அட்டமி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணிமை, விதிபாதயோகம், பன்னிரண்டு மாதப்பிறப்பு, கிரகணம், சிவராத்திரி, அர்த்தோதயம், மகோதயம் முதலாகிய புண்ணிய காலங்களிலே புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து, தியானம் செபம் முதலியன விசேஷமாகச் செய்தல் வேண்டும். சித்திரை, ஐப்பசி என்னும் இவ்விரண்டு மாதப் பிறப்பும் விஷு எனப்படும்; இவைகளிலே, மாதம் பிறத்தற்கு முன்னெட்டு நாழிகையும் பின்னெட்டு நாழிகையும் புண்ணிய காலம். ஆடி மாதப் பிறப்பு, தட்சணாயனம் எனப்படும். இதிலே மாதம் பிறக்கு முன் பதினாறு நாழிகை புண்ணிய காலம். தை மாதப்பிறப்பு உத்தராயணம் எனப்படும்; இதிலே, மாதம் பிறந்த பின் பதினாறு நாழிகை புண்ணிய காலம். கார்த்திகை, மாசி, வைகாசி, ஆவணி என்னும் இந்நான்கு மாதப் பிறப்பும் விட்டுணுபதி எனப்படும்;

இவைகளிலே மாதம் பிறக்கு முன் பதினாறு நாழிகை புண்ணிய காலம். ஆனி, புரட்டாதி, மார்கழி, பங்குனி என்னும் இந்நான்கு மாதப்பிறப்பும் சடசீதிமுகம் எனப்படும்; இவைகளிலே, மாதம் பிறந்த பின் பதினாறு நாழிகை புண்ணிய காலம். சூரிய கிரகணத்திலே பரிசகாலம் புண்ணிய காலம்; சந்திர கிரகணத்திலே விமோசன காலம் புண்ணிய காலம். அர்த்தோதயமாவது தை மாதத்திலே ஞாயிற்றுக் கிழமை அமாவாசையும் திருவோண நட்சத்திரமும் விதிபாத யோகமும் கூடிய காலம். மகோதயமாவது தை மாதத்திலே திங்கட்கிழமையும் அமாவாசையும் திருவோண நக்ஷத்திரமும், விதிபாத யோகமும் கூடிய காலம்.

- ஆறுமுக நாவலரின் இரண்டாம் சைவவினாவிடை -197